முருகப்பெருமான் துணை

**மகான் ஜனாதனர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.09.2021, வெள்ளிக்கிழமை

1. தருமனே கலியுகம் காக்கும்
தவசியே ஆறுமுக அரங்கனே
வறுமை வென்று காத்தருளும்
வள்ளலே வாழும் ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் துல்லிய ஆசிதனை
கனிவு கொண்டு ஜனாதனர் யானும்
கணக்காய் பிலவ யாளி திங்கள்
3. திங்களிலே இருபானைதிகதி புகர்வாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 25ம் நாள், 10.09.2021, வெள்ளிக்கிழமை)
தேசிகனார் கேட்க அருள்வேன்
ஓங்காரம் மிக்க ஞான உலகம்
உயர்வாய் அமைய உரைப்பேன்
4. உரைக்கவே ஆசான் காட்டும்
உண்மை வழிதனை ஏற்று
குறைவின்றி உலக மக்கள்
குருவே என வேண்டி வர
5. வருகவே நிலைகள் மாறும்
வணங்கி தீட்சை ஏற்று
குருவடி முழுமை சரணாகதி
குவலயத்தார் கண்டுத் தொடர
6. தொடரவே துன்பங்கள் விலகும்
தெளிவு திடமும் காண்கும்
இடரான சுமைகள் வறுமை
எல்லாம் அகன்று மாற்றம்
7. மாற்றம் வளமும் பலமுமாக
மகத்துவமிக்க வழிகளாகவே
ஆற்றல் கூடி அரங்கன் தயவால்
அனைத்தும் வெற்றி ஆகும்
8. ஆகவே ஞானத் தலைவன்
ஆறுமுகன் வழிபாடு தன்னை
செகமெங்கும் ஏற்றுத் தொடர
செப்பிடுவேன் தருமம்தனை வளர்க்க

9. வளர்க்கவே வையகம் தன்னில்
வளர்ச்சிப் பணிகள் பெருகும்
தளர்விலா திடமான செயலாய்
தலைமைகள் ஞான வழியில் நடந்து

10. நடந்துமே கலியின் ஆட்சி
ஞான ஆட்சியாக மாறக் கூடும்
இடரை வெல்லும் ஞானியர்பாதை
யுகமக்கள் உண்மை ஞானமாக ஏற்று

11. ஏற்றுவர எல்லா மாற்றமும்
ஏழாம்படைவீட்டிலிருந்து துவங்கி
மாற்றம் உலகமெல்லாம் காணும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–